முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 616**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.06.2021, ஞாயிற்றுக்கிழமை

1. பரமானந்த சதா சிவசற்குருவே
பாலதண்டாயுதன் என்பேரருளாய் கலியில்
தரணிகாக்க அவதாரம் புரிந்துநல்
தவசியாய் தர்மனாய் வாழும் அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்களாக எந்தன் அதிசூட்சுமமாக
வள்ளலாக வாழுகின்ற ஞானியே
3. ஞானியே தர்மத்தின் காவலனே
ஞானவான்களாக்கி உலகோரை மாற்றவந்த
கனிவேலன் என்சூட்சும படைப்பே
கருணைமிக்கஅரங்கனே உன்தர்மம் இந்தஉலகைவெல்லும்
4. வெல்லுமப்பா உன்கொள்கையும் சன்மார்க்கமும்
விரைந்து இந்தஉலகை மாற்றம்செய்து
இல்லாமை என்கின்ற அனைத்துநிலைகளையும் போக்கி
ஏற்றம் தந்து இந்தஉலகை பாதுகாக்கும்
5. காக்கவல்ல மகாதவசி நீ
கருணைகொண்ட மகாயோகி நீ
ஆக்கமுடன் என்பலத்தால் இந்தஉலகில்
அவதாரத்தின் நோக்கம் வெற்றிகொண்டு
6. வெற்றிகொண்டு கலியுகத்தை ஞானயுகமாக்கி
வேலவன் என்ஆளுமைக்குண்டான பூமியாகமாற்றி
ஆற்றல்பட உன்தொண்டர்படைகளை கொண்டே
அகிலத்தில் ஞானஆட்சி உருவாக்கம்செய்வாய்
7. செய்யவே யான்சூட்சுமமாய் உன்னுள்இருக்க
சிந்தைகலந்து உன்வழி தொடர்புகொண்டோரெல்லாம்
ஐயம்தீர்ந்து உலகில் எமபயம்நீங்கி
அழியாமை என்கின்ற மகாசக்திபெற்று ஞானிகளாவர்
8. ஆகவே அரங்கனே கலியின் சிறந்தவழிகாட்டி
அரங்கன் அறமும் சன்மார்க்கமுமே
வரமாக உலகை காக்கஇருக்க
வணங்கிவந்து உலகோர் தேற்றம்பெறுவீர்

தேற்றம்பெறுவீர் என்று கூறி சுப்ரமணியர் யானும் அருளிய தேசிகனுக்குண்டான ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.